## பதினோராம் அத்தியாயத்தின் பரம ஸாரம்

அர்ஜுனன்–வாஸுதேவ! நீ செய்த உபதேசத்தால் என்னுடைய சில விபரீத ஜ்ஞானங்கள் நிர்மூலமாக அழிந்து விட்டன. பிரபஞ்சத்தை படைத்து காத்து அழிப்பவன் நீயே என்பதையும், உன்னுடைய எல்லையில்லாத மகிமைகளையும் புரிந்துகொண்டேன். உன்னுடைய நிரங்குசமான ஐச்வர்யத்தை காட்டும் ரூபத்தைக்காண விரும்புகிறேன். எனக்கு அதைக் காணத் தகுதி உண்டென்றால் உன்னைக் குறைவறப் ப்ரகாசப்படுத்த வேண்டும் என்றான் விஜயன்

பகவான்–என்னுடைய அப்ராக்ருதமான உருவங்களைப் பார். முதலில் நூற்றுக்கணக்கான உருவங்களைப் பார். அவற்றில் வேஷம், அணி, ஆயுதம் இவை வெவ்வேறாய் பலவிதமாக இருக்கும் நிறம், உருவம் இவையும் பலவாக இருக்கும். என் உருவத்தில் பன்னிரண்டு ஸூர்யர்களையும், அஷ்ட வஸுக்களையும், பதினொரு ருத்திரர்களையும். அச்வினி தேவதைகள் இருவரையும், நாற்பத்தொன்பது மருத்துக்களையும் பார். என்னுடைய ஆயிரக்கணக்கான உருவங்களில் ஓர் உருவத்தில் அதிலும் ஒரு மூலையில் எல்லா உலகங்களையும் பார். யார் மடிவார், யார் வாழ்வார், தோல்வி யாருக்கு, வெற்றி யாருக்கு. இம்மாதிரியான நீ அறிய விரும்பும் எல்லா விஷயங்களையும் இதில் காணலாம். அளவுபட்டவையான சில விஷயங்களைச் சில ஸமயமே கிரகிக்கும் இந்தக் கண்ணால் அளவற்றதான என் உருவைக் காண இயலாது. திவ்யமான கண்ணை உனக்கு அளிக்கிறேன், அதனால் நீ என்னுடைய விச்வரூபத்தைக் காண்.

பகவான் அர்ஜுனனுக்கு திவ்யமான கண்ணை உடனே அளித்தான். மிகச் சிறந்ததும், ஈஸ்வர நிலைக்குச் சார்ந்ததுமான திருவுருவைக் காண்பித்தான்.

மகாராஜரே! அந்த விச்வரூபத்தைக் காணக்கூடிய பாக்கியம் அடியேனுக்கும் கிடைத்தது. முக்காலத்திய ஸ்வதுக்களுக்கும் அது ஆதாரமாகையால் தேச கால அளவற்று விளங்கிற்று. எல்லாத் திக்குகளிலும் முகங்கள் இருந்தன. பல பல கண்கள் மற்றும் பல ஆச்சரியமான அங்கங்கள். அப்ராக்ருதமான ஆபரணங்கள், ஆயுதங்கள், மாலை, ஆடை, மணம் மிக்க பூச்சை உடையதாகவும், ஆச்சரியமேயான எல்லா வஸ்துக்கள் நிறைந்ததாகவும் அது காட்சியளித்தது.

ஆகாயத்தில் ஒரே ஸமயம் ஒரு கோடி ஸூர்யர்கள் தோன்றினால் இருக்கும் ப்ரகாசம் அந்த உருவத்திற்கு இருந்தது. அந்த விச்வரூபத்தில் , ஒரு சரீரத்தின் ஒரு பகுதியில் எல்லா உலகங்களையும் கண்டான் பார்த்தன். அவன் உடலில் மயிர்சிலிர்ப்பு ஏற்பட்டது. ஸர்வேச்வரனைத் தலையால் வணங்கினான். இரு கைகளையும் கூப்பிக்கொண்டு பகவானிடம் விண்ணப்பிக்கலானான்.

அர்ஜுனன்–உன்னுடைய உடலில் எல்லாத் தேவர்களையும், பிராணிகளையும் காண்கிறேன். பிரமன், அவனுக்குட்பட்ட சங்கரன், ரிஷிகள், மணியொளி வீசப்பெற்ற நாகங்களையும் பார்க்கிறேன். உன்னுடைய உடலில் உள்ள கை, வயிறு, முகம், கண் இவற்றுக்கு அளவே இல்லை. இந்த உருவத்துக்கு ஆதி, முடிவு, நடு இவற்றை நான் காண்கிலேன். சோதிக் குவியலாய் நீ விளங்குகிறாய். எல்லாப் புறமும் உன்னுடைய ஒளி வீசுகிறது. ஒளி நிறைந்த நெருப்பு ஸூர்யன் இவற்றினுடைய கிரணம் போன்ற கிரணமுடையவனாய் எந்தப் பக்கமும் காணக் கண் கூசும்படி ஸேவையை ஸாதிக்கிறாய். உன்னைக் கிரீடமணிந்தவனாகவும், கதையைத் தரித்தவனாகவும், திருவாழியை ஏந்தியவனாகவும் காண்கிறேன். ப்ரமாணங்களைக் கொண்டு அறிய வேண்டிய உயர்ந்த அக்ஷரம் என்ற பொருள் நீ. எல்லா உலகங்களுக்கும் பரமதாரம் நீ.

ஸவரூப ரூப குண விபவங்களில் மாறுதலற்றவன் நீ. எப்பொழுதுமுள்ள பரம புருஷன் நீயே. எல்லையற்றவையான வீர்யம் முதலிய குணங்களுக்கு இருப்பிடம் நீ. எல்லையற்ற கை முதலிய அவயங்களை உடையவன் நீ. வேண்டியவர்களுக்கு சந்திரன் போன்று ஆனந்தமாயும், வேண்டாதவர்களுக்கு ஸூர்யன் போன்று கண்களை உடையவன் நீ. இந்த உலகை உனது தேஜஸ்ஸினால் எரிப்பவனாகக் காட்சியளிக்கிறாய்.

## பதினோராம் அத்தியாயத்தின் பரம ஸாரம்

எல்லா உலகங்களிலும் எல்லாத் திசைகளிலும் நீயே நிறைந்திருக்கிறாய். ஆச்சரியமாகவும், பயங்கரமாகவும் இருக்கும் உன் உருவைக் கண்டு அநுகூலர், ப்ரதிகூலர், உதாஸீனர் அனைவருமே நடுங்குகின்றனர்.

அநுகூலராயும், துணிந்தவர்களாயும் இருக்கும் தேவர் கூட்டம் உம்மிடம் புகுகின்றனர். தைரியமற்ற சிலர் அஞ்சினவராய்க் கைகுவித்து துதிக்கின்றனர். மகரிஷிகளும் ஸித்தர்களும் திரளாக "பல்லாண்டு" என்று மங்களாசாஸனம் செய்து நிறைந்த புகழ் மாலைகளால் உன்னைத் துதிக்கின்றனர்.

ருத்திரர், ஆதித்யர், வஸுக்கள், ஸாத்யர், விச்வதேவர், அச்வினி தேவதைகள், மருத்துக்கள், உஷ்ணமாக உண்கின்ற பித்ருக்கள், கந்தர்வர், யக்ஷர், அஸுரர், ஸித்தர் இவர்கள் கூட்டம் உன்னைப் பார்க்கின்றன.

உன்னுடைய உருவில் முகம், கண், புஜம், துடை, கால், வயிறு இவை எண்ணற்றவையாகக் காட்சியளிக்கின்றன. பல கோரப் பற்களால் பயங்கரமானதும் மிகப்பெரிதுமான உருவைக் கண்டு யாவரும் நடுங்குகின்றனர். நானும் அச்சமுருகிறேன்.

உனது உருவம் பரமபதத்தையும் அளாவியுள்ளது. ஒளி மயமான பல நிறங்கள் கொண்டது. கண்கள் ஒளியைப் பரப்புகின்றன. இப்படிப்பட்ட உன் உருவத்தைக் கண்ட மாத்திரத்தில் என் மனம் நடுங்குகிறது. துணிவையும் சுகத்தையும் இழந்து விட்டேன் நான். கோரப் பற்களால் பயங்கரமாய் ப்ரளய கால அக்கினிக்கு ஒத்தனவுமான உனது முகங்களைக் கண்டு எனக்கு திகப்ரமம் ஏற்பட்டுவிட்டது.

துரியோதனாதிகள் அனைவரும் பீஷ்மர், துரோணர், கர்ணன் முதலானோரும் மற்றும அவர்கள் கட்சியிலுள்ள அரசர் அனைவரும், கோரப் பற்களால் விகாரமாய், பயங்கரமமுமான உனது வாய்களில் புகுகின்றனர். எங்களைச் சேர்ந்த வீரச்சிரேஷ்டர் சிலரும் உன் வாய்க்குள் புகுகின்றனர். புகுந்தவரில் சிலரின் தலையை பொடியாக்குகிறாய்.

நதிகளின் பல நீர் வெள்ளங்கள் கடலைக் குறித்தே நேர்முகமாகப் பெருகுவது போல் இந்த அரசர்களும், அனல் வீசும் உனது முகங்களில் புகுகின்றனர். விட்டில்கள் அழிவுக்காகவே மண்டி எரியும் நெருப்பில் புகுவது போல் இந்த வீரச்ரேஷ்டர்களும் உன் வாயில் அழிவதற்காக புகுகின்றனர்.

அனல் விசும் முகத்தால், நாற்புறமும் அரசர்களை விழுங்குகிறாய். மிகவாக ரத்தம் பெருகும் உதடுகளை நக்குகிறாய்.

அர்ஜுனன்– "இந்த பயங்கரமான உருவமுடைய நீ யார்?எனக்குச் சொல். உன்னுடைய முயற்சியை நான் அறிகிறேனல்லேன்" என்றான்.

பகவான்–பாண்டவ!நான் அவரவர்களின் ஆயுள்முடிவை எண்ணுபவன். இந்தக் கூட்டத்தை அழிக்க வளர்ந்திருக்கிறேன். சத்துர்ய ஸைன்யங்களில் இருக்கும் வீரர்கள், நீ யுத்தம் செய்யாமற்போனாலும் அழியப் போகின்றனர். அவர்கள் அழிவை நீ தடுக்க முடியாது. ஆகையால் நீ எழுந்து அவர்களை அழித்து புகழ் பெறு. ராஜயத்தை அநுபவி. இவர்கள் தவறு செய்தபோதே இவர்களை அழிக்க ஸங்கல்பித்துருக்கிறேன். நான் கொல்வதாக ஸங்கல்பத்திருக்கும் பீஷ்மர், துரோணர், ஜயத்ரதன், கர்ணன் மற்றுமுள்ள வீரர்களையும் கொல் நீ வெறும் வியாஜமாக மட்டும் இரு. கவலப்படாமல் போர் செய் என்றான் கண்ணன்.

ஸஞ்சயன்–திருதராஷ்டிரரே!பகவானுடைய வார்த்தையைக் கேட்டு அர்ஜுனன் அவனை வணங்கினான். கைகளைக் குவித்துக் கூறலானான்

## பதினோராம் அத்தியாயத்தின் பரம ஸாரம்

இந்திரியங்களுக்கு நியாமகனே! உன்னைப் புகழ்வதினால் உலகம் களிப்புறுகிறது. அரக்கர் அஞ்சி பல திசைகளிலும் ஓடுகின்றனர். ஸித்தர் கூட்டம் வணங்குகிறது. மிகவும் பெரியவனான நீ பிரம்மனை படைத்தவனான உன்னை வணங்குவதில் என்ன ஆச்சரியம்? அழியாத ஆத்மஸ்வரூபம் நீ. கார்யமான பிரக்ருதியும் நீயே. முக்த ஸ்வரூபமும் நீ. புருஷஸூக்தாதிகளில் ஓதிய மகாபுருஷன் நீ. இந்த உலகத்திற்கு பரம ஆதாரமாய் இருப்பவன் நீ. உலகிலுள்ள அறிவாளிகள் நீ, அறியப்பெறும் பொருளும் நீ. பரமபதம் என்ற வைகுண்டமும் நீயே. உலகெல்லாம் நீயே வியாபித்து யாவற்றுக்கும் நீயே ஆத்மா நீயே சரீரம்.

நீ அனைவருக்கும் கொள்ளுத்தாத்தா. தாத்தா, தந்தை, வாயு, அக்கினி, வருணன், சந்திரன், பிரம்மன். எங்கும் உள்ளவனே நமஸ்காரம். எதிரிலும் நமஸ்காரம், பின்பக்கத்திலும் நமஸ்காரம். எல்லாப் பக்கங்களிலும் நமஸ்காரம்.

கண்ணா! இதுவரை கண்ட உன் மகிமையை நான் அறியாததாலோ, அதிக பரிச்சயத்தினாலோ "அடே க்ருஷ்ணா" "அடே யாதவா" என்று சொன்னவற்றையெல்லாம் பொறுத்தருள வேண்டும். பரிஹஸிப்பதற்காக கூறியதை க்ஷமித்தருள வேண்டும். விளையாட்டு, படுக்கை, உண்பது, வீற்றிருப்பு முதலிய சேர்ந்து செய்த அவமதிப்புகளை பொருத்தருள வேண்டும்.

கோவிந்த! நீயே தந்தை, குரு, பூஜிக்கத்தகுந்தவன். உனக்கு ஈடே இல்லை. எல்லாவித உறவாகவும், குணக் குன்றாகவும், ஸர்வேச்வரனாகவும் இருப்பதனால் உன்னை வணங்குகிறேன். தவறு செய்த மகன், தன் தவ்றை பொருத்தருள பிரார்த்தித்தால் அவன் தந்தை பொறுப்பதுபோல், தோழன் செய்த தவறை தோழன் பொறுப்பதுபோல் நான் செய்த குற்றத்தை பொறுக்க வேண்டும்.

கண்ணா! இதற்கு முன் காணாத உருவைக் கண்டு மிகவும் ஆனந்தமடைந்தேன். என் மனம் அச்சத்தால் நடுக்கமுற்றது. உன் பழைய உருவத்தைக் காண அருள வேண்டும். முன்போலவே கிரீடமணிந்து, கதையை ஏந்தி, காண விரும்புகிறேன்.

பகவான்—பாண்டவ! இந்த உருவம் அடிமுடியற்றது. யாவற்றுக்கும் காரணமானது. உன்னைத் தவிர வேறு யாரும் காண முடியாது. என் ஸங்கல்ப சக்தியால் உன்னிடம் அன்பு கொண்டு உனக்கு காண்பித்தேன்.

இந்த உலகில் பக்தியற்ற யாரும் இதைக் காண முடியாது. வேதார்த்த ஜ்ஞானம் தானம், யாகம், ஹோமம், கடுமையான தவம் இவற்றால் காண முடியாது. பக்தி இல்லாமல் இவை இருந்து பலனில்லை. பயம் நீங்கி, அன்பார்ந்த மனத்துடன் என் பழைய உருவத்தைப் பார்.

ஸஞ்சயன்—"மகாராஜரே! கண்ணன் தனது சதுர்ப்புஜமான பழைய உருவத்தைக் காட்டினான். அர்ஜுனன் ஆறுதலடைந்தான்." என்றான்

அர்ஜுனன்—உனக்கே அஸாதரணமானதும், கல்யாண குணங்கள் நிறைந்தும் உன் மனித உருவைப் பார்த்தபிறகே மனம் நிலை பெற்றது

பகவான்—அர்ஜுன! மிகவும் அரிதான என் உருவத்தை தேவர்களும் கண்டதில்லை உன்னைத் தவிர. இப்பொழுது என் விச்வரூபத்தை சிலர், கண்டனர், அதுவும் ஏகதேச தர்சனம்தான். அவ்வளவு சக்தியை நான் அவர்களுக்கு கொடுத்தேன். உன்னைப் போல் அவர்கள் காணவில்லை.

பார்த்த! என்னை காண பக்தி ஒன்றே ஸாதனம். வேதம் ஓதுதல், ஓதுவித்தல், தவம், தானம், ஜபித்தல் என்னைக் காண முடியாது. பக்தி இல்லாமல் இவற்றால்

எவ்விதப் பிரயோஜனமும் இல்லை.

என்னுடைய பிரீதியைக் கருதியே,என் ஆராதனமான கர்மாக்களைச் செய்பவனாய் மற்ற விஷயங்களில் பற்றற்று, எந்த ஜந்துவிடமும் விரோதமற்று இருக்கும் பரம பாகவதனே என்னைப் பெறுகிறான். அவித்யை முதலிய தோஷங்கள் அற்றவனாய் என்னையே அநுபவித்துக்கொண்டு பெருவாழ்வு வாழ்கிறான்.

பதினோராம் அத்தியாயத்தின் பரம ஸாரம் முற்றும்